Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

# மு.அன்புச்செல்வன் சிறுகதைகளில் காணப்பெறும் சமுதாயச் சீர்கேடுகள்

# SOCIAL PROBLEMS IN THE SHORT STORY BY MU.ANBUCHELVAN

**ஜெயந்திமாலா இராமசாமி [1] / Jayanthimala Ramasamy [1]**

[1]பாதாக் ராபிட் தமிழ்ப்பள்ளி, பேராக், மலேசியா. / Batak Rabit Tamil Primary School, Perak, Malaysia.
மின்னஞ்சல் / Email: jayanthiramasamy@yahoo.com

**Abstract**

Critical thinking skills are indeed a vital skill for a person in improving his or her life standard. A student who practices this skill in daily life is proven more capable of solving problems they tend to face. Literature is written in the proper essence of a language, positively plays an important role in developing the critical thinking skills. *Thirukkural* is a classic Tamil literature consisting 1330 couplets. This study was carried out to analyse critical thinking among students through *Thirukkural* essays. The relationship between *Thirukkural* and critical thinking was also studied in this research. This study was conducted between 20 students from a Perak secondary school. A couplet from *Thirukkural* that emphasize the discipline was chosen as a topic for essay writing for this research. The researcher used five elements which are understanding, correlating, inquiries, decision-making skills and concluding it with a detailed summary of critical thinking to evaluate the students' essays. The data was collected based on the essay written by those students. The data was evaluated using those five elements from critical thinking. The findings of the research showed that *Thirukkural* develops critical thinking skills among the students. Other than that, this study also prevails the relationship between *Thirukkural* and critical thinking.

**Keywords**: Malaysian short stories, Community ideas, Family, Social problems

***ஆய்வுச் சாரம்***

*மு.அன்புச்செல்வன் எழுதிய சிறுகதைகளில் சித்தரிக்கப்படும் பாத்திரங்களின் விளைவுகளையும் சமூகப் பிரச்சினையை அடையாளம் காணுதலும் இந்த ஆய்வின் நோக்கமாகும். மு. அன்புச்செல்வன் தொகுப்பில் பதினான்கு சிறுகதைகள் உள்ளன. இந்த ஆய்வுக்கு 'மிரி', 'கஸ்தூரி', மற்றும் 'உச்சாப்பி' ஆகிய மூன்று சிறுகதைகள்*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

*பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு நூலக ஆராய்ச்சி மற்றும் மார்க்சிஸ்டும் சமூகவியல் திறனாய்வு கோட்பாடும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மு.அன்புச்செல்வன் தொகுத்த இம்மூன்று சிறுகதைகளிலிருந்தும் இரண்டு சமூக பிரச்சனைகள் பற்றி கையாளப்பட்டுள்ளதை விவரிக்கின்றன. பொறுப்பு, பெருந்தன்மை, விசுவாசம், உதவி மற்றும் கண்ணியம் போன்ற மதிப்பிற்குட்பட்ட செயல்கள் யாவும் இச்சிறுகதைகளில் போற்றப்பட்டு உள்ளன. இந்தச் சிறுகதையின் வழி மனித மதிப்பு, சிறந்த பாத்திரம், குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கான ஆழமான செய்திகள் அனைத்தும் மனித வாழ்க்கைக்குத் தேவை என்பதை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், மனிதாபிமான மதிப்புகள் முக்கியமானவை என்றும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். சிறுகதைகளில் ஆய்வு செய்யப்படும் நேர்மறையான விளைவுகள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் எதிர்மறையான விளைவுகளைக் கொண்ட எண்ணங்களைச் சீர்தூக்கிச் சிந்திக்கவும் பயன்படுத்தப்படலாம்.*

***கருச்சொற்கள்:*** *மலேசிய சிறுகதைகள், சமூக கருத்துகள், குடும்பம், சமூகப் பிரச்சினைகள்*

## முன்னுரை

*இலக்கியம் என்பது ஏதேனும் ஓர் இலக்கை, இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கூற்று. மனிதனை உயர்ந்த மனிதனாக வாழச் செய்வதே இலக்கியத்தின் நோக்கம், மக்களின் இதயத்தை மென்மைப்படுத்தி, நுண்ணிய உணர்வுகளை வளரச் செய்து, மக்களைப் பண்படுத்தும் நூல்களுக்கு மட்டுமே, இலக்கியம் என்ற சொல் பொருந்தும். இலக்கியம் ஒரு சமூதயாத்தின் போக்கு, இலக்கு, இலட்சியம், நிலைக்கண்ணாடி என்றெல்லாம் குறிப்பிட முடியும். அவ்வகையில் சிறுகதை இலக்கியம் குறித்துக் காண்போம். சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம். சிறுகதை ஒரு தொடக்கம், மையச் சம்பவம் அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. சிறுகதை, வாழ்க்கையின் ஒரு பகுதியை, கவலையை மறந்து விட்டுக் கவனிப்பதாக உள்ளது. சிறுகதையின் வடிவம் கதை எழுதுபவரின் மனோதர்மத்தைப் பொறுத்தது என்று புதுமைபித்தன் சிறுகதையின் போக்கை விளக்கியுள்ளார். அதனையே சிறுகதை என்பது சுருக்கமான, கதைகூறும் புனைவுவகை உரைநடை இலக்கியமாகும். பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றிருந்த இடத்தைத் தற்காலத்தில் சிறுகதை இலக்கிய வகை பெற்றுள்ளது என்று கூறியுள்ளார் மு.வரதராசன் (திருநாவுக்கரசு, 1984)[1].*

*சிறுகதைகள் கால மாறுதலுக்கும் விளைவுகளுக்கும் ஏற்ப உள்ளடக்கம் வளர்ச்சி அடைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருக்கொள்ளத் தொடங்கிய சிறுகதை தற்போது நல்ல வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது.*

*"வாழ்க்கையின் ஒரு குறுக்கு வெட்கை, கலைத்திறனும் சொல்நயமும் கொண்டதாகச் சித்தரித்தால் அதுவே சிறுகதையாகிறது", என்று ராஜம்கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளதாக லதா (2016)[2] தன் முதுகலை ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.*

*மலேசியாவில், 1930-ல் தமிழ் மொழி நாளிதழ்களான 'முன்னேற்றம்', 'தமிழ் முரசு', 'தமிழ் நேசன்', மற்றும் 'மலை நாடு' போன்றவைகளில் சிறுகதைகள் தோன்றிவிட்டதாக சீ.வி குப்புசாமி குறிப்பிட்டுள்ளதாகக் கார்த்திகேசு (1978)[3] தமது ஆய்வடங்களில் குறிப்பிட்டுள்ளார். தொடக்க நிலையில் சிறுகதைகள் மெதுவான வளர்ச்சியைக் கண்டிருந்தாலும் 1950-ல் முதிர்ச்சியான அனுபவத்தைப் பெற்றது. தொடர்ந்து 1960 தொடங்கி இன்று வரை விரைவான வளர்ச்சியைப் பெற்றுள்ளது என லதா (2016)[2] தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.*

*அவ்வகையில் 1930-ல் தமிழ் சிறுகதை இலக்கியங்களில் மலேசிய சிறுகதைகான தோற்றம் தனியிடத்தைக் கொண்டிருந்தது. மலேசிய சிறுகதை இலக்கியம் வெறும் இலக்கியங்கலாக மட்டுமாக இல்லாமல் என்றும் ஆய்வுக்குட்படுத்தக்கூடிய பல்வேறு சமூதயாச் சிந்தனைகளையும் மறுமலர்ச்சிகளையும் உட்படுத்தி இருக்கின்றன. அவைகள் பலரும் ஆய்வுகுட்படுத்தக்கூடிய இலக்கியத் தரத்தைக் கொண்டுள்ளவை என்று குறிப்பிடுகையில் மிகையில்லை. அவ்வகையில் மு. அன்புச்செல்வன் படைப்பில் உருவாகிய சிறந்த சிறுகதைகளில் விழித்திருக்கும் ஈயக்குட்டைகள் சிறுகதைத் தொகுப்பும் ஒன்றாகும் என லதா (2016)[2] தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.*

***சமுதாயச் சிந்தனை***

*முதலில், சிந்தனை என்பது ஆத்மா தனக்குத்தானே பேசிக் கொள்ளுவதாகும் என்கிறார் கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோ. இந்தச் சிந்தனையின் மூலம் எண்ணத்திற்கும் சிந்தனைக்கும் உள்ள வேறுபாட்டினை அவர் மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். அவ்வகையில் சமுதாயச் சிந்தனை என்றால் மனிதச் சிந்தனையிலிருந்து துளிர்த்துவிடும் துளிகள் ஒரு சில சமுதாயத்தின் தலைவிதியையே மாற்றிவிடுகின்றன என்பதைச் சமுதாயச் சிந்தனை என்று கூறுவர். எல்மோ ரோப்பர் என்ற சிந்தையாளர் சமுதாய மாற்றங்கள், சமுதாயத்தில் உள்ள ஆறு பிரிவினரால் உருவாக்கப்படுகின்றன என்று எடுத்துரைக்கின்றார் (பஞ்சாங்கம், 2012)[4].*

*முதலாவதாக, அவை மிக முக்கியமான ஒரு சிறு அறிவாளிக் கூட்டம். இவர்களிடமிருந்துதான் சமுதாயத்தை மாற்றக்கூடிய சிறந்த கருத்துகள் வெளியாகும். இரண்டாவது, மேற்கூறியவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொண்ட முக்கியத் தோழர்கள். இவர்கள் அக்கருத்துக்களை நடைமுறையில் செயல்படுத்த முயல்வர். மூன்றாவது தரப்பினர், மேற்கூறிய கருத்துகளை எல்லாத் துறையிலும் தீவிரமாகப் பரப்ப முயல்வர். நான்காவது தரப்பினர், கருத்துகளைப் பொறுமையாகப் பரப்ப முயல்வர். ஐந்தாவதாக, இப்பிரிவினர் அரசியல் தீவிரமாக உள்ளவர்கள், கருத்துகள் இப்பிரிவினரை அடையும்பொழுது மேலும் சமூதயாத்தில் ஆழமாக ஊடுருவுகின்றது.*

*இறுதியாக, இப்பிரிவினர் அரசியலில் சிறிதும் அக்கறையற்றவர்கள். ஆகக்கடைசியாகக் கருத்துகள் இப்பிரிவினரை வந்தடைகின்றன என சேகர் (2012)[5] தம் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு சமுதாயத்தில் ஒவ்வொரு சமூகத்தினரை இலக்கியப் படைப்புகள் வழிச்சார்ந்து சமுதாயச் சிந்தனைகள் வந்தடைகின்றன. அவ்வகையில் மு.அன்புச்செல்வனின் விழித்திருக்கும் ஈயக்குட்டைகள் தொகுப்புச் சிறுகதையில் வெளிப்படும் சமுதாயச் சீர்கேடுகளைப் பார்க்கப் போகின்றோம்.*

## ஆய்வின் முன்னோடிகள்

*லதா (2016)[2] மலாயாப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்ட ஆய்வுக்காகப் பாக்கியலட்சுமி 2012-ல் பாலமுருகனின் சிறுகதைகள் தொகுப்பில் காணப்படும் 'மலேசிய தமிழர்களின் வாழ்க்கை', என்ற சிறுகதையில் சமுதாயச் சிந்தனைகள் பற்றி எழுதியுள்ளார். மேலும், அதே பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சேகரன் முத்தப்பன் 2011-ல் 'வ.முனியன் தொகுப்பில் காணும் கரு ஓர் ஆய்வு', என்ற தலைப்பில் தனது முதுகலைப் பட்ட ஆய்வுக்காக சமுதாயச் சிந்தனைகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். தொடர்ந்து, உமாதேவி 2010-ல் தனது முதுகலைப் பட்டத்திற்காக 'சண்முகசிவாவின் சிறுகதைகள்: கருவும் வடிவமைப்பும் ஓர் ஆய்வு', என்ற ஆய்வின் தலைப்பில் சமுதாயச் சீர்கேடுகள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், முதுகலை மற்றும் இளங்கலை பட்டத்திற்கு ஆய்வாளர்கள் சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றி ஆராய்ந்து எழுதுயுள்ளனர். இதன் பின்னணியில், இந்தக் கட்டுரையை வடிவமைக்க ஆய்வு முன்னோடிகள் உறுதுணையாக இருந்தனர்.*

## ஆய்வு நெறி, கோட்பாடு

*பஞ்சாங்கம் (2012)[4] இலக்கியம் என்பது மொழியாலான ஒரு சமூகம் எனச் சொல்லப்படுவதன் பொருள் என்ன? இலக்கியம், சமூகத்தில் இருந்துதான் பிறக்கிறது என்றாலும் சமூகமும், இலக்கியம் காட்டும் சமூகமும் ஒன்றல்ல என்பதுதான் அதன் பொருள். அதாவது இடையில் 'மொழி' என்கிற ஊடகம் இருக்கின்றது. எனவே, சமூதயாத்தைச் சித்தரிப்பதற்கு முயலும் படைப்பாளிக்கென்று தன் காலம் தனக்கென கட்டமைத்த தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு, கொள்கை, எதிர்கால கனவு முதலியவற்றின் அடிப்படையில், 'தேர்ந்தெடுக்கிற' ஒரு முறையில் செயல்படுகின்றது. இதனையே சமூகவியல் திறனாய்வுக் கோட்பாடுகள் என்றாகின்றது. இச்சமூகவியல் திறனாய்வுக் கோட்பாடுத் துணைக் கொண்டு மு. அன்புச்செல்வன் சிறுகதையில் இடம்பெற்றுள்ள சமுதாயச் சீர்கேடுகளான சூதாட்டம், குண்டர் கும்பல், மது என்ற நெறியற்ற வாழ்க்கை முறைகளைச் சமூகச் சிந்தனைக்காகவும் விழிப்புணர்வுக்காகவும் ஓர் ஆய்வாக இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.*

*தொடர்ந்து, தனிமனித நடவடிக்கைகளின் ஒரு கூறாக இலக்கியத்தைப் பார்க்கும் பார்வையிலிருந்து விலகி, மனிதர்கள் கூடிவாழும் சமூக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இலக்கியத்தை அணுகும் முறையியலை வளர்தெடுத்ததில் மார்க்சியத் திறனாய்விற்கும் பெரும் பங்குண்டு என பஞ்சாங்கம் (2012)[4] குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் குறிப்பிடுகையில் ஜெர்மன் நாட்டுத் தத்துவ அறிஞராக காரல் மார்க்ஸ் (1818-1883), சமூகவியல் அறிஞராக பெரெட்ரிக் எங்கெல்ஸ் (1820-1895) ஆகிய இருவரும் சேர்ந்து வடிவமைத்த பொதுவுடைமைத் தத்துவத்தையே, 'மார்க்சியம்' என்று அழைக்கிற மரபு உருவாகிவிட்டது. அந்த மார்க்சியத் தத்துவ அடிப்படையில் இலக்கியத்தை விளக்குகிற முறையியலைத்தான் மார்க்சியத் திறனாய்வுக் கோட்பாடு என்கிறோம்.*

*மேலும், பஞ்சாங்கம் (2012)[4] குறிப்பிடுகையில், இம்மார்க்சியத் திறனாய்வு அடிப்படையில் தனி மனிதன் அடிப்படையான கோட்பாடுகளை அறிந்து கொள்ள முயல வேண்டும் என்கின்றது. மார்க்சியம் ஏழை, பணக்காரன் என்ற வர்க்கமற்ற, எல்லாரும் சமத்துவமாக வாழ்கின்ற மனித சமூகத்தை மனிதர்கள் முயன்றால் அமைத்துக் கொள்ள முடியும் எனத் தர்க்கப்பூர்வமாக நம்புகிறது. இந்த நம்பிக்கையின் மேலேயே அதன் கோட்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. அதற்கேற்ப இந்தச் சமூதயாத்தைத் தத்துவார்த்த சொற்களால் விளக்கிக் கொண்டு மட்டும் இருக்காமல், மாற்றி அமைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டு முயற்சி செய்வதே முதன்மையாக முன்நிற்கும் பணி என்பார் கார்ல் மார்க்ஸ். இந்த நோக்கத்தையே முதன்மையாகக் கொண்டு மு. அன்புச்செல்வன் தன் சிறுகதைகளில் தனிமனித அடிப்படைக்கான கோட்பாடுகளை முன்னிருத்தி விளக்குகின்றார். கல்வி, பொருளாதாரச் சிந்தனை, கருத்துச் சுதந்திரம் என அவர்தம் இலக்கியத்திறத்தில் விழிப்புணர்வைக் கொண்டு வருகின்றார்.*

***மு. அன்புச் செல்வனின் கதைச் சுருக்கம்***

*விழித்திருக்கும் ஈயக்குட்டைகள் (அன்புச்செல்வன், 2001)[6] தொகுப்பிலிருந்து, 'மேரி' என்ற கதை ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய திருமண வாழ்க்கையை எவ்வாறு தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையுடன் வருகின்றது. முதன்மை கதைமாந்தன் பீட்டர் தன் மனையாள் மேரியோடு மனமொத்த தம்பதிகளாக உள்ளனர். கணவனை இழந்த ருக்குமணிக்கு ஆதரவாக இருக்க நினைத்த பீட்டர் அவளுக்கு எல்லாவுமாகிப் போகிறான். இதனைச் சற்றும் எதிர்பாராத மேரி தாங்க முடியாதவளாய் தன் பக்க நியாயத்தைக் கேட்டுவிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள்.*

*அதுபோல், 'கஸ்தூரி' ஓர் ஆணால் பாதிக்கப்பட்ட பெண் ஆவாள். ஓர் ஆண்மகன் தன்னுடைய நடவடிக்கைகளுக்கு அவள் கண்டிப்பாகப் பொறுப்பேற்க வேண்டும். கோழையாகப் பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடுவதும் அனைத்து சுமையையும் ஒரு பெண் மீது சுமத்திவிட்டுச் செல்வதும் ஆண்மையற்றச் செயலல்லவா. பெண்களுக்கு ஆண்கள் இழைக்கும் துயர்களை இங்கு சமூகச்*

சிந்தனையாக மட்டும் அன்றி பெண்கள் விழிப்புணர்தலுக்கும் அடித்தளமிட்டுக் கற்பு ஆண் பெண் இருபாலருக்கும் இருக்க வேண்டிய உயரியச் சிந்தனை நெறியாகவும் சிந்தனையாகவும் முன் வைக்கிறார். மு. அன்புச் செல்வனின் சிறுகதைகள் அக்காலச் சூழலில் இடம்பெற்றுள்ள சமூதயாச் சிக்கலை மட்டுமாக அவர்தம் படைப்புகளில் முன்னிருத்தவில்லை இன்றளவும் அச்சிக்கலுக்கான தீர்வுகள் சமூகத்தைச் சென்றடையா நிலையில் சில கதைகளில் சில இடங்களில் மிக அழுத்தமாகவே கூறியுள்ளார்.

'உச்சாப்பி' என்ற கதையில் செல்லதுரை மேனிலை மனிதராக இல்லாவிட்டாலும் தன் போக்கில் போய்க் கொண்டிருக்கும் ஒரு சாதாரண மனிதராவார். அவரிடம் அநியாயமாக விவாதம் செய்து நான்கு நண்பர்கள் கொன்று விட்ட பின்னர் அவர் பேயாக வந்து அவர்களைக் கொல்கிறார். இதில் இந்த சமூகத்தின் இளைஞர்களின் சீரழிவை மு. அன்புச் செல்வன் காட்டத் தவறவில்லை. மேலும், சமுதாயத்தின் எதிர்கால நம்பிக்கைகள் பாழாய்ப் போய் விடுவதை சமூக அக்கறையுடன் காட்டியுள்ளார்.

மலேசியத் தமிழ்ப் படைப்புலகில் பரிசுப் போட்டிகளில் பங்கேற்று அதிக அளவில் முதல் நிலை பரிசுகள் பெற்ற ஓரிரு எழுத்தாளர்களில் அன்புச்செல்வனே முதன்மையானவர். இவரும் அவருடைய எழுத்துகளும் வளருகின்ற புதிய எழுத்தாளர்களுக்கு ஒரு மேற்கோளாக அமையும். இவர் எழுத்துப் பணியை மிகவும் அக்கறையாகவும் ஒரு வேள்வியை மேற்கொள்வதை இவருடைய எழுத்துப் படிவங்கள் உணர்த்துகின்றன. இவருடைய எழுத்துகளும் பன்முக வடிவங்களைப் பெற்று இலக்கிய உலகிற்கு அழகு சேர்க்கின்றன. இவருடைய சிறுகதைகள், கதை மாந்தருக்கு முக்கியத்துவம் கொடுப்பவை, கதை சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவை, புதிய பரிசோதனைகளாக தொன்மம், படிமம், முதலிய கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவை என்ற பல்வகையாக அமைந்து இருக்கும். இதையும் மீறி வெறும் வார்த்தைகளின் வர்ணனைகளை மட்டுமே நம்பியும் இவர் கதைகளைப் படைத்து வெற்றி பெற்றுள்ளார். மு. அன்புச் செல்வனின் கதைகளை இளம் எழுத்தாளர்கள் படித்து, கலந்துரையாடி, கருத்துரை செய்து புரிந்து கொண்டால், அவர்களுடைய வருங்கால படைப்புகள் உரம் பெறுவது திண்ணம்.

'விழித்திருக்கும் ஈயக்குட்டைகள்', தொகுப்பில் காணப்படும் 'மேரி', மற்றும் 'கஸ்தூரி', சமூகக் கதைகளாக உள்ளன. 'உச்சாப்பி', போன்ற பேய் கதைகள் நமது பாரம்பரியத்தில் புதியவை இல்லைதாம். ஆனால், மு. அன்புச்செல்வனின் இக்கதைகளை முழுமையாக 'வெகுசன கலாச்சாரக்' கதைகளாக ஒதுக்கிவிட முடியாது. காரணம், திகில் நிறைந்த பேய்க் கதைகளாக இதை இவர் படைத்திருந்தாலும் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் சமூகவியல் பிரச்சனைகளை இவர் தொட்டுக் காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது என டாக்டர் கிருஷ்ணன் மணியம் தமது ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளதாக லதா (2016)[2] தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறப்பட்ட அக்கோட்பாடு குறிப்புகளின் அடிப்படையிலேயே மு. அன்புச்செல்வனின் சிறுகதைகள் சமூதாயத்திற்குப் பல்வேறு சிந்தனைகளை வழங்கியுள்ளன.

### மு.அன்புச்செல்வன் சிறுகதையில் நெறித் தவறும் வாழ்க்கையினால் ஏற்படும் சமுதாயச் சீறழிவு

அவ்வகையில் முதன்மையாக மேரி சிறுகதையில் காணப்பெறும் சமூதாயச் சீர்கேடுகள் என்று பார்க்கையில் நெறித் தவறி வாழ்கின்ற வாழ்க்கையை மு.அன்புச்செல்வன் முன்வைக்கின்றார். திருவள்ளுவர் வாழ்க்கை நெறியை அறம், பொருள், இன்பம் என மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். திருக்குறளின் தத்துவமே "நல்வழியில் வாழ்ந்து நல்வழியில் பொருள்சேர்த்து இன்பமான வாழ்வு வாழ்வதே ஆகும்", என லதா (2016)[2] தமது முதுகலைப் பட்ட ஆய்வடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஆண் பெண் இருபாலரிடத்திலும் நெறியான வாழ்க்கையை வாழச் செய்பவர்களை இந்தச் சமூதாயம் போற்றுகின்றது. அதுவும் கணவன் மனைவி வாழ்க்கையானது இருவரிடத்திலும் உண்மை நேர்மையுடைய வாழ்க்கையையே இருவரும் விரும்புகின்றனர். அவ்வகையில் கணவன் மனைவி ஒருவர் பிரிதொருவர் அறியாதவாறு தவறுகள் செய்யும்போது அவர்களிடத்தில் பல்வேறு துன்பத்தையும் பின்விளைவுகளையும் விளைவிக்கின்றது. மாற்றாள் கணவன், மாற்றான் மனையாள் மீது விருப்பம் கொள்வது நெறியற்றது. இதனை மு.அன்புச்செல்வன் மிக ஆழமாகவும் அழகாகவும் விளக்கியுள்ளார்.

இச்சிந்தனையைத் தமிழ்ச் சான்றோர்கள் பலரும் முன்னிருத்தியுள்ளனர். அவர்களுள் திருவள்ளுவர் பிறன்இல் விழையாமை குறித்து இல்லறவியல் அறத்தினைப் பகுத்து எழுதியுள்ளார். அதில் குறள் 141 இல் பிறருடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை என கீழே உள்ள குறள் குறிப்பிடுகிறது.

பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல் (குறள் 141)

இச்சிறுகதையில் வரும் பீட்டர், கணவனை இழந்த ருக்குமணிக்கு ஆதரவாக இருக்க நினைத்து அவளுக்கு எல்லாவுமாகிப் போகிறான். கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது என்ற சிந்தனையை இங்கு தகர்த்துள்ளார். ஆண் பெண் இருவரிடத்தில் கற்பு பொதுமையானது என்ற புரட்சிக் கவிஞன் பாரதியின் சிந்தனை, 'கற்பினைப் பொதுவில் வைப்போம்' என்பதை அவர்தம் இலக்கியப் படைப்பில் சமூதாயச் சிந்தனை நினைவுருத்தலாகவும் சிந்தனையாகவும் முன்னிருத்தியுள்ளார்.

அதே சமயம் பெண்கள் வாழ்க்கையில் தவறுகின்ற தருணம் அவளை மட்டும் பாதிக்காது. அவளைச் சார்ந்தவர்களையும் பாதிக்கின்றது. எவ்விதப் பிரச்சனைக்கும்

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

*சிக்கலுக்கும் தற்கொலை ஒரு காரணம் ஆகா. எனவே, பெண்கள் ஒரு போதும் சிக்கல் எழும்போது தகாத முடிவு எடுப்பது தவறாகும். உணர்ச்சி வயப்படக்கூடாது என்ற சிந்தனையையும் முன் வைக்கிறார்.*

**நெறித் தவறும் வாழ்க்கை பகுப்பாய்வு**

*உடல் ஓர் அற்புதமான கருவி. உடம்பில் உயிர் இயங்குகிறது. உடற்கருவி வாய்க்காது போனால் உயிர் இயக்கம் இல்லை, நுகர்வு இல்லை, அறிவு இல்லை. உயிர் வாய்ப்பாக அமையாது போனால் உடல் பயனற்றது. உடல் உயிருடன் இணைந்திருக்கும் பொழுதுதான் பெயர். உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டால் பெயர் போய்விடுகிறது. பிணம் என்ற புதுப்பெயர் வருகிறது.*

*வாழ்வதற்கு இந்த வாழ்க்கையை நன்றாகப் பயன்படுத்த வேண்டும். வாழ்வாங்கு வாழ வேண்டும்; முழுமையாக வாழ்தல் வேண்டும். மனம் ஆற்றல் வாய்ந்த கருவி. காற்றைவிட வேகமாகச் செல்லும் தன்மையது. ''எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்'' என்பர். உடலுக்கு வாய்த்துள்ள கருவிகள் இரு வகையின. ஒன்று அறிவுகருவிகள்; இவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியன. பிறிதொன்று செய்கருவிகள்; இவை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன. ஆகவே, மனிதன் அவ்விருவகை கருவிகளையும் அடக்கியாள வேண்டும் என திருநாவுக்கரசு (1984)[1] குறிப்பிட்டுள்ளார்.*

*காதல் மலரினும் மெல்லியது; அதன் செவ்வி உணர்ந்தார் சிலரே என்பது வள்ளுவத்தின் முடிவு. காதல் மனையறத்தில் நம்பிக்கையும் நல்லெண்ணங்களும் ஊற்றுக் கண்களாகும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலும், ஒத்துழைத்தலும் இன்றியமையாக் கடமை; மனையறத்தின் இணைகள்; மாண்புகளை ஒருவருக்கொருவர் சேர்க்கும் இணைகளாகும். ஆதலால் நமது அறத்தில் மனை வாழ்க்கை பிரிவினைக்குரியது அல்ல; இது ஒப்பந்த அளவில் அமைந்ததும் அல்ல; இது ஒரு தியாக வேள்வியாகும்.*

> செல்லாமை உண்டேல் எனக்குஉரை மாற்றுநின்
> வல்வரவு வாழ்வார்க்கு உரை (குறள் 1151)

*என்கிறது வள்ளுவம். ஆதலால், காதல் மனவாழ்க்கையின் ஆன்ம இன்பம்; ஆன்ம அனுபவம். ஆதலால் கற்புக்கடம் பூண்ட பெண்ணே வாழ்க்கைக்குத் துணை நிற்க முடியும்; மற்றவர்களால் இயலாது. கற்பென்னும் திண்மை கொண்ட வாழ்க்கை என்றும் வள்ளுவம் போற்றுகிறது.*

*மலேசியரிடையே மணமுறிவு சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. நாடறிந்த நாளிதழ்களில் 'உத்துசான்' நாளிதழும் பலதரப்பட்ட மக்களிடையே வரவேற்புக்குடையது என்பது வெள்ளிடையே. அவர்கள் மலேசியாவில் மேற்கொண்ட மணமுறிவு ஆய்வின் தரவுகள் பின்வறுமாறு:*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

**மணமுறிவு கேட்டுப் பதிவுச் செய்தவர்களின் எண்ணிக்கை**

| எண் | ஆண்டு | தம்பதியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2012 | 29, 253 தம்பதியர் |
| 2 | 2013 | 29, 583 தம்பதியர் |
| 3 | 2014 | 33, 842 தம்பதியர் |

(மூலம்: www.utusan.com.my/berita/nasional/92-678)[7]

*பிரதமர் துறையின் துணையமைச்சரான டத்தோ டாக்டர் அஸ்ராப் வாஜ் டுசுகி கூறுகையில், கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் விவாகரத்து சேர்க்கையைக் காட்டும் புள்ளிவிவரங்களின் அதிகரிப்பு மிகவும் ஆபத்தான நிலைமையை உணர்த்துவதாகக் கூறினார். மேலும், 2012-ல் 29, 253 தம்பதியர் விவாகரத்திற்கு விண்ணப்பித்திற்கும் வேளையில் 2013 ஆம் ஆண்டில் 29, 583 ஜோடிகள் விவாகரத்துக் கோரியுள்ளனர். மற்ற இரண்டு ஆண்டுகளைக் காட்டிலும் 2014-ல் மேலும் அதிகரித்த வண்ணமே உள்ளதாகத் தன் மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இந்த மணமுறிவுக்குப் பலவீனமான சமயக் கல்வி, பொருளாதார காரணிகள், ஒரு மூன்றாவது நபர் தலையீடு, பாசியல் பிரச்சனைகள், சமூகப் பிரச்சனைகள், சுகாதாரப் பிரச்சனைகள், தொழில் பிரச்சனைகள், பொறுப்பற்ற் மற்றும் தகவல்தொடர்பு பிரச்சனைகள் யாவும் காரணிகளாக அமைவதாகக் கூறினார்.*

*ஒருவர் நமக்குத் தீமை செய்தால் நாம் திரும்ப அவருக்குத் தீமை செய்தல் பழி வாங்குதல் ஆகும். இந்தப் பழிவாங்கும் உணர்வு இயல்பாகவே மாந்தரிடம் அமைந்துள்ளது. ஆயினும், நல்லொழுக்கம், பண்பாடு என்பது பழி வாங்காமையே ஆகும். ஏனெனில், உணர்ச்சி வசப்படுதல் என்பது இயல்பு ஆயினும் பழிவாங்குதலிலும் பொருத்துக் கொள்ளுதல் கடினமான காரியம். ஆனால், பொறுத்தாற்றும் பண்பு தீமைக்கும் பழிவாங்குதலுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.*

*வாழ்க்கை ஒரு நெடிய பயணம். இந்த நெடிய பயணத்தைத் தனியே நடந்து முடிக்க இயலா. வழிநடைப் பயணத்துக்குத் துணை தேவை. இறைவன் உயிர்க்குலத்திற்குக் கொடுத்த ஒரேவரம் அன்புதான். அன்பே உயிர்க்குலத்தின் வளர்ச்சிக்கு ஊற்று; அன்பே உயிர்குலத்தின் பாதுகாப்புக் கவசம் ஆகும். நாளைய நாடு இன்றைய குழந்தைகள் கையில்தான் இருக்கப் போகிறது. மனிதர்கள் வருவார்கள் போவார்கள்! ஆனால் நாடு என்றும் இருக்கும். ஆதலால் நாட்டின் நிலையான தன்மையை நினைவிற்கொண்டு எதிர்வரும் தலைமுறையை இன்றைய தலைமுறை தம்பதிகள் சீராக வளர்க்க வேண்டும்.*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

**மு.அன்புச்செல்வன் சிறுகதையில் லாட்டரிச் சீட்டினால் ஏற்படும் சமுதாயச் சீறழிவு**

*உழைப்பாலன்றிப் பொருள் ஈட்ட விருப்புபவன் அறநெறி நிற்பவன் அல்லன். அதுமட்டுமன்றிப் பிறர் பொருளை விரும்புபவன் தனது அறிவை இழக்கின்றான்; ஆற்றலை இழக்கின்றான். காலப்போக்கில் மானத்தையும் பொருமையையும் இழக்கின்றான்; பழியைத் தேடிக் கொள்கின்றான் என்கிறது வள்ளுவம்.*

*நடுவின்றி நன்பொருள் வெஃகின்குடி பொன்றிக்*
*குற்றமும் ஆங்கே தரும் (குறள் 171)*

*பொருளியல் நியதிகளைச் சார்ந்தே ஒழுக்கங்கள், அறிவு, மற்றும் ஆற்றல்கள் வளர்கின்றன. சமுதாயத்தினரிடயில் நம்பிக்கையும் நல்லெண்ணமும் வளர்கின்றன. ஆதலால் உழைத்து வாழ்தலே வாழ்வு. பிறர் பொருளை எடுத்துக்கொள்ள விரும்புதல், உதவியாகப் பெறுதல், மற்றும் இனமாகப் பெறுதல் ஆகியனவும்கூட வெறுக்கத் தக்கனவேயாம் என்கிறார் திருவள்ளுவர்.*

*தொடர்ந்து, மு.அன்புச்செல்வன், 'லாட்டரிச் சீட்டு' ஒருவகையான சூதாட்ட நம்பிக்கைக் குறித்துச் சமூதாயத்தில் சீர்கேட்டை விளைவிப்பதாகக் குறிப்பிடுகிறார். சூதாட்டம் ஒருவித போதையைத் தரவல்லது. பொருளாதர நெருக்கடியில் இதுபோன்ற சூதாட்டம் உழைப்பின்றி வருகின்ற ஒருவகை பணப்புலக்கம் அதிஷ்டத்தையும் ஒரு குருட்டு நம்பிக்கையினால் வாழ்வாதரத்தைச் சிதைக்கும் தன்மையுடையதுமாகும்.*

*லாட்டரிச் சீட்டில் நம்பிக்கை வைத்திருப்பவன் வாழ்க்கையில் இழக்கக் கூடாததை எல்லாம் இழக்க வேண்டியிருக்கும் என்ற சிந்தனையையும் சமூதாயத்திற்கு வலியுறுத்துகிறார். தவிர, அதிர்ஷ்டம், சமய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனுமாஷ்யமான சத்திகளும் ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கைகளில் ஈடுபடும் மனிதர்களும் அதனால் அவர்களின் இழப்புகளும் அதிகம் என்பதை தெளிவுப்படுத்துகிறார். கடவுள் நம்பிக்கையையும் உழைப்பையும் நம்புகிறவர் மட்டுமே சிறப்பான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும் என்று எதிர்மறைவில் நின்று கூறுவதாகவும் இச்சிறுகதை அமைகின்றது.*

**சூதாட்டம்**

*சூதாட்டம் வாழ்க்கையைச் சீரழிக்கும் என்பதைக் காப்பிய இலக்கியமே முன்னிறுத்துக் காருகின்றது. மகாபாரதத்தில் சகுனியின் சூதாட்டத்தில் ஒரு மகாயுத்தப் போர் நடத்தது. லாட்டரிச் சீட்டுச் சூதாட்டம் ஒவ்வொரு குடும்பத்தையும் சிதைக்கின்றது. ஆரம்பத்தில் அதிர்ஷடத்தில் கிடைக்கப்பெறும் சிறுதொகை பெரும்போதையைத் தருகின்றது. அது ஒருவகைப் போதையைத் தருகின்றது. நாளடைவில் இந்த லாட்டரிச் சீட்டு வாங்குவதற்கு நேர்மையற்றச் செயல்களில் ஈடுபடவும் செய்வர்.*

சூதாடுவது, பந்தயம் கட்டுவது, லாட்டரி ஆகியவற்றைக் குறிப்பாக வேதாகமம் கண்டிப்பதில்லை. ஆனால், பண ஆசையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று எச்சரிப்பதாகக் கிருஸ்துவம் கூறுகிறது. சூதாட்டம் நிச்சயமாகவே பண ஆசையில் கவனம் செலுத்துகிறது. மேலும், மக்களைத் துரிதமாகவும் சுலபமான வழிகளில் ஐசுவரியங்களைத் தரும் வாக்குறுதிகளினால் சோதிக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது.

சூதாட்ட விடுதிகள் பலவிதமான விளம்பர தந்திரங்களினால் எல்லாப் பணத்தையும் இழந்துவிடக்கூடிய அபாயத்திற்கும் சூதாட்டம் ஆடுபவர்களை வசீகரித்து விடுகின்றன. அவை குறைந்த விலையில் அல்லது இலவசமான மதுவையும்கூடப் பல வேளைகளில் வழங்குகிறார்கள். இதனால் போதைப்பழக்கம் ஏற்படுகிறது. அதன் விளைவாக அறிவார்ந்த தீர்மானங்களை எடுக்கும் திறமையும் குறைகிறது. பணத்தைக் கட்டுக்கட்டாக எடுத்துக் சென்று கொடுத்துவிட்டு ஒன்றும் கிடைக்காமல் திரும்புவதற்கு மிகவும் பொருத்தமான முறையில் சூதாட்ட விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. விரைவில் விட்டுப்போகிற வெற்றின்பங்கள் மட்டுமே மிஞ்சுகிறது.

லாட்டரிகள் கல்வி மற்றும் சமூகத்திட்டங்களுக்கு உதவுகிற ஒன்றாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றன. ஆனாலும் லாட்டரிப் போட்டிகளில் கலந்துகொள்கிறவர்கள் லாட்டரிச்சீட்டுகளைப் பணம் கொடுத்து வாங்கவே சிரமப்படும் நபர்கள்தான் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எப்படியாவது கிடைத்தால் நல்லது என எண்ணும் இவர்களுக்குத் துரிதமாக ஐசுவரியம் கிடைக்கும் வழியின் வசீகரம் தடுக்கமுடியாத ஆசையைக் காட்டுகிறது. வாழ்க்கையில் பணக்காரனாக வெற்றிப்பெற வாய்ப்பு மிக மிகக் குறைவு என்பதால் பலருடைய வாழ்க்கையை இது நாசம் செய்துவிடுகிறது. “வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்”, என்கிறது நீதிமொழிகள்.

பிற நாடுகளைப் போலவே மலேசியாவும் பல துறைகளில் துரித வளர்ச்சி கண்டு வருகையில் மனித குலத்தை நாசப்படுத்தும் செயல்களும் நடந்த வண்ணமே உள்ளன. மலேசிய அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டு உரிமமும் வழங்கப்பட்ட சூதாட்ட மையங்களும் உரிமம் அற்ற சூதாட்ட மையங்களும் இயங்கி வருகின்றன. அன்மைய காலமாகப் பண நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மலேசியர்கள் விரைவு பணக்காரர் திட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். பல குடும்பங்களைச் சார்ந்த தலைவன் தலைவிகளும் ஆலோங்கிடமிருந்து பெற்ற பணத்தைத் திருப்பித் தர முடியாமல் தற்கொலைகளையும் செய்துள்ளனர் (www.utusan.com.my)[7].

துறவு நெறியில் சென்ற புத்தர் “பெருமுயற்சியுடன் வாழ்வதே வாழ்வு”, என்று கூறியதாகத் தமிழ் இலக்கியம் கூறுகிறது. மானுடத்தின் புலன்களில், பொறிகளில் கலந்திருப்பது உழைப்பு. உழைத்தால் பொறிகளின் ஆற்றல் வளரும்; புலன்களின் ஆற்றல் வளரும். உழைப்பு இல்லையேல், உழைப்பில் பயன்படுத்தாத இரும்பு துருப்பிடித்து அழிவதைப்போல உடம்பும் அழியும். நெற்றியில் வியர்வைத் துளிகள்

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

*காணும் அளவுக்குக் கடுமையாக உழைத்தால் உண்ணும் உணவு சுவையாக இருக்கும். அங்ஙனம் உழைத்து உண்பதே நலம் பொருந்திய வாழ்க்கை.*

*தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது*
*உண்ணலின் ஊங்கினியது இல் (குறள் 1065)*

*எனும் திருக்குறளின் வரிகளுக்கு ஏற்ப உழைப்பு!, உழைப்பு!, நேர்மையான உழைப்பு ஒன்றுதான் மனித சமுதாயத்திற்குச் சிறப்பான மருந்து ஆகும்.*

**முடிவுரை**

*தம்மைக் காத்துக்கொள்வதற்கும் மற்றவர்களை அறிந்து கொள்வதற்குமான உயர்ந்த கல்வி முன்னோர்களின் வாழ்க்கையைக் கற்பதே ஆகும். அதுவே நமது வாழ்வை உயர்த்தும் என்பதால் முன்னோர்கள் வழி நடத்தல் வேண்டும் என்பதைக் கூறுகிறார். இல்வாழ்வில் கணவன் மனைவியின் நட்பும் உறவும் வளர்பிறை போல் வளைவதற்கு வள்ளுவர் நாலடியார் நெறியைப் பின்பற்றுதல் வேண்டும். அப்பண்பே நல்ல பண்பாக மலர முடியும் என்றும் எடுத்துரைக்கிறார். இல்வாழ்வில் உரிமை என்ற பெயரில் கணவன் மனைவி இருவரும் தங்கள் போக்கில் நடத்தல் கூடாது. அன்பை முதலில் வைத்து உரிமையை இரண்டாவதாக வைத்தால் மட்டுமே இல்வாழ்வில் வெற்றி பெற இயலும் என்கிறார்.*

*இன்றைய வாழ்வில் ஆடம்பரப்போக்கு மிகுந்து காண்ப்படுவதால் பல குடும்பங்கள் சிதைகின்றன. ஆகவே, எளிய வாழ்வு வாழ்தலே இல்லறத்தை மேம்படுத்தும் என்று கூறுகிறார். சமுதாயம் வளரும் குழந்தைகளிடம் தான் உள்ளது என்பதால் பெற்றோர்களே குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்கிறார்.*
*எல்லோரிடமும் குறைகள் காணப்படுவது இயல்பு என்பதால் அதனை எல்லோர் முன்னிலையிலும் கூறி பிறரைப் புண்படுத்துதல் கூடாது; பிறரும் தன்னைப் புண்படுத்தாத வகையில் வல்லமையோடு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்கிறார்.*

*இவ்வாறாக, மு. அன்புச்செல்வனின் சிறுகதையான ‘மேரி’, ‘கஸ்தூரி’, மற்றும் ‘உச்சாப்பி’ என்பவை இல்லறவாழ்வில் உள்ளவர்க்கு வாழ்வியல் சிந்தனைகளை வளர்க்கும் விதமாகவும், தமிழ்ச்சமூகத்திற்குச் சமுதாய சிந்தனைகளை வித்திடுவதாகவும் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. இதனை நம் சமூகம் உணர்ந்து, வாழ்வில் கடைப்பிடித்தால் நாட்டிலே ஒரு முற்போக்குச் சமூதாயமாகத் திகழ்ந்து நிறைய வெற்றிகளைச் சாதிக்க முடியும் என்பது வெள்ளிடைமலையாகும்.*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 2 (2017), Pages 21-33 / ISSN: eISSN 2590-3691

**மேற்கோள் நூல்கள்:**


1. *திருநாவுக்கரசு, கே. (1984) பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனின் இலக்கியம். பாரி பதிப்பகம்: சென்னை.*
2. Latha, M. (2016). *Nilai kemanusiaan dalam kumpulan cerpen mu. anbuchelvan dari perspektif teori Moral*. Tanjung Malim: Universiti Pendidikan Sultan Idris.
3. Karthigesu, R. (1978). *Perkembangan cerpen-cerpen malaysia dalam bahasa malaysia dan bahasa tamil : satu kajian perbandingan.* Tesis sarjana sastera. Kuala Lumpur: Jabatan Pengajian India, Universiti Malaya.
4. *பஞ்சாங்கம், கே. (2012). இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும். முல்லை பதிப்பகம்: சென்னை.*
5. *சேகர், நா. (2012). மலேசியத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிந்தனைகள். உமா பதிப்பகம்: கோலாலும்பூர்.*
6. *அன்புச்செல்வன், மு. (2001). விழித்திருக்கும் ஈயக்குட்டைகள், சிறுகதை தொகுப்பு. முச்சங்கம் பதிப்பகம்: கோலாலும்பூர்.*
7. www.utusan.com.my/berita/nasional/92-678-pasangan-daftarkan-penceraian -1.196883